(2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE 21 UTM 408**

**என்.ஜி.எம்.கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி**
**பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2023**

**பி.ஏ. – தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**நான்காவது பருவம்** **காலம் : 3 மணி நேரம்**

**பகுதி – 3**
**படைப்பிலக்கியம்**

**பகுதி – அ (10 x 1 = 10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.(K1)**

1. தமிழ்ப் புதுக்கவிதையின் தந்தை யார்?

   அ) மு.மேத்தா ஆ) தமிழன்பன் இ) ந.பிச்சமூர்த்தி ஈ) வைரமுத்து

2. ஒரு கதையின் மையமாக இருப்பது எது?

   அ) கதைமுடிவு ஆ) கதைக்கரு இ) வருணனை ஈ) தலைப்பு

3. கூத்துக்கலை என்று எதனை அழைப்பர்?

   அ) நாடகம் ஆ) புதினம் இ) கவிதை ஈ) சிறுகதை

4. உரைநடை வெளிப்பாட்டின் முக்கிய வடிவம் எது?

   அ) புதுக்கவிதை ஆ) சிறுகதை இ) கட்டுரை ஈ) மரபுக்கவிதை

5. ஆவணப்படத்தைச் சுட்டுக.

   அ) கயல் ஆ) மகாத்மா காந்தி இ) காடு ஈ) மயிலாஞ்சி

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)**

6. உருவகம் என்றால் என்ன?

7. கதைப்பின்னல் - விளக்கம் தருக

8. நாடகம் - குறிப்புரைக்க..

9. கட்டுரை என்பது யாது?

10. விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படும் பொருள்களுள் இரண்டினைச் சுட்டுக.

**(த.பி.பா.)**

**பிரிவு – ஆ (5 x 4 = 20 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) புதுக்கவிதையில் குறியீடு மற்றும் உவமையின் பயன்பாடு குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) ‘வானமே எல்லை’ என்ற தலைப்பில் கவிதை வரைக.

12. அ) தற்கால சிறுகதைப் படைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாவை?.

(அல்லது)

ஆ) வட்டார வழக்குப் புதினங்களில் கதைக்களச் சூழலின் தன்மையினை உரைக்க.

13. அ) தமிழ் நாடகத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) நாடகத்தில் உரையாடலின் முக்கித்துவத்தைப் புலப்படுத்துக.

14. அ) கட்டுரையின் வடிவம் எவ்வாறு இருக்க வேண்டும்?

(அல்லது)

ஆ) விளக்கக் கட்டுரைக்கும் பகுப்பாய்வுக் கட்டுரைக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.

15. அ) குறும்படங்களை இயக்கும் திறன் பற்றி இயம்புக.

(அல்லது)

ஆ) மின்சாரச் சிக்கனம் குறித்து ஐந்து கருத்துரை வாக்கியங்களை எழுதுக.

**பிரிவு-இ (4x10=40 மதிப்பெண்கள்)**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக**

**(பதினாறாவது கேள்விக்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும் ) (K4/K5)**

16. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க.

17. ‘மண்வாசம்’ என்னும் தலைப்பில் சிறுகதை எழுதுக..

18. புதினத்திற்கான கட்டமைப்பு முறைகளை ஆராய்க.

19. நாடகத்தின் வகைகளைப் பகுத்துரைக்க.

20. ‘தமிழ் எனது மூச்சு’ என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

21. ‘பெண்ணும் மண்ணும்’ என்ற தலைப்பிலான ஆவணப்படத்திற்கு உரைச்சித்திரம் எழுதுக.

*ETHICAL PAPER*

*****